**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No.32/2024**
**Prosecution Witness**:PW2

| | | | |
|---|---|---|---|
| Name | மணிகண்டன் (PW2) | Caste | |
| Father's Name | முருகேசன் | Calling | |
| Village | குரும்பாளையம் | Religion | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of March 2026** by K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present),*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன்.நான் 13.03.2023 தேதியன்று நான் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது வாரி அவன்யூ அருகே ஒரு நபர் சைக்கிளை சேவூர் டு அவிநாசி ரோட்டில் ரோட்டை கடந்து சென்றார். கடந்த நபரை மாருதி ஷிப்ட் கார் எண் TN 43 Z 5878 வந்த மோதியது. வாகனம் மோதியவுடன் அவர் கீழே விழுந்து விட்டார். அந்த மாருதி ஷிப்ட் கார் சேவூரில் இருந்து அவிநாசி நோக்கி வந்தது. சைக்கிளில் வந்த நபருக்கு காலிலும் பின் தலையிலும் காயம் ஏற்பட்டது.மாருதி ஷிப்ட் காரை ஓட்டி வந்தவரை எனக்கு தெரியும் அவர் ஆஜரில் உள்ள எதிரி தான். அவர் பெயர் சந்திரகுமார் என்று விசாரித்து தெரிந்து கொண்டேன். இந்த விபத்தில் அடிபட்டு இறந்தவர் பெயர் சுப்பிரமணியம். அவர் என்னுடன் பணி புரிந்துள்ளார். அடிபட்டவுடன் நான் என் ஓனருக்கு அலைபேசி மூலமாக தகவல் சொல்லிவிட்டு என் ஓனரிடமிருந்து அடிபட்ட நபரின் அக்கா சிவகாமி என்பவரின் போன் நம்பரை பெற்று தொலைபேசி மூலமாக தகவல் சொல்லிவிட்டு அடிபட்ட நபரை ஆம்புலன்சில் ஏற்றிவிட்டு நான் வீட்டிற்கு சென்று விட்டேன்.போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.N.Keerthana)<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |